# மெட்ரோவில் இன்று இலவச பயணம்

**சென்னை, பிப். 14–**

மெட்ரோ ரயிலில் பொது மக்கள் இன்று இலவசமாக பயணம் செய்யலாம்.

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோநகர் இடையிலான, மெட்ரோ ரயில் சேவை, இன்று, துவங்கப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி, இதை துவக்கி வைக்க உள்ளார். இதையொட்டி, இன்று மதியம், 2:00 மணியில் இருந்து, இரவு, 11:00 மணிவரை, மெட்ரோ ரயிலில் இலவசமாக பயணம் செய்ய, நிர்வாகம் அனுமதித்துள்ளது.

இதன் வாயிலாக, விமான நிலையம் – திருவொற்றியூர் விம்கோநகர், பரங்கிமலை – சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயிலில், பொதுமக்கள் கட்டணமின்றி பயணம் செய்யலாம்.